**Starting time 11.38A.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 198/2014**

Deposition of P**.W. –1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Thiru. Periyasami, Gr. III Bench Clerk of this court, on 19.01.2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜசேகரன் | Father Name | : தர்மலிங்கம் |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**: **(2,3 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை முதல் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்).** 1 ஆம் பிரதிவாதி தர்மலிங்கம் எனது தந்தை ஆகும். 2 ஆம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி எனது சகோதரர். 3 வது பிரதிவாதி 2 வது பிரதிவாதியின் மனைவி. தாவா சொத்திற்குண்டான மூலப்பத்திரங்களை நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி மூலப்பத்திரங்களை தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும் இல்லை. இந்த தாவா தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொத்து குறித்து 2 வழக்குகள் அசல் வழக்கு எண் 143/2011 பாகப்பிரிவினை தாவாவும், அசல் வழக்கு எண் 272/2011 என்ற தாவாவும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண் 143/2011 என்ற வழக்கு 2 ஆம் பிரதிவாதி ஆத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்காகும். மேற்படி வழக்கில் எனக்கு சார்வு செய்யப்பட்ட வாதுரையை வா.சா.ஆ–7 ஆவணமாக தாக்கல்

செய்துள்ளேன். மேற்படி வழக்கில் எனது அப்பா முதல் பிரதிவாதி நான் 2 ஆம் பிரதிவாதி என் சகோதரிகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் ஆகும். மேற்படி வழக்கு செப்டம்பர் 2011 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் உள்ள ஒரு பகுதி சொத்துதான் தற்போது தாவா சொத்தாகும். மேற்படி வழக்கில் உள்ள மற்ற சொத்துகள் பொறுத்து என் பெயரில் தான செட்டில்மெண்ட் ஆவணம் உள்ளது. அதனை இவ்வழக்கில் காட்டவில்லை என்று சொன்னால் சரிதான். 30.08.2010 ல் என் தகப்பனாரால் என் பெயருக்கு எழுதிவைக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்ற பரிகாரம் கேட்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 30.08.2010 ல் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்துக்கள்தான் தற்போது தாவா சொத்துக்களாகும். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் வா.சா.ஆ– 5 மற்றும் 7 ஆக இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2 செட்டில்மெண்ட் ஆவணங்களிலும் நான் பிழை திருத்தம் செய்தது மேற்படி அசல் வழக்கு எண் 143/2011 தாக்கல் செய்ததற்கு பின்புதான் என்றால் சரியல்ல. மேற்படி பிழை திருத்த ஆவணங்கள் வா.சா.ஆ– 6 மற்றும் 8 ஆகும். நான் தாக்கல் செய்த 272/2011 வழக்கின் பிராது நகல் வா.சா.ஆ–16 ஆகும். மேற்படி வழக்கில் எனது தகப்பானாரை நான் தரப்பினராக சேர்க்கவில்லை. மேற்படி தாவா 12.09.2011 ல் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி பிழை திருத்த பத்திரங்களான வா.சா.ஆ–6 மற்றும் 8 நான் தாக்கல் செய்த தாவா 272/2011 பின்னிட்டுதான் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கானது என் பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணங்களின் அடிப்படையில்தான் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் பிழை திருத்தங்கள் பத்திரத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் பிழை திருத்தம் செய்யப்பட்டதாக என்னுடைய வழக்கில் திருத்தம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நான் தாக்கல் செய்த இவ்வழக்கு நான் திரும்ப பெற்றுக்கொள்வதாக

எழுதி தரப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட தேதி தெரியவில்லை ஆண்டு 2015 ஆகும். மேற்படி வழக்கில் உள்ள சொத்துகள், தற்போது உள்ள தாவாவும் வழக்கு சொத்துகளாக காட்டப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டனை பரிகாரம் கோரி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் அந்த வழக்கு சொத்தை குறித்து நான் இந்த தாவாவை தாக்கல் செய்து உரிமை கோர எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 2 ம் வெவ்வேறு சர்வே எண்களை கொண்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் ஆகும். தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் எதற்காக பிழைதிருத்தம் செய்யப்பட்டது என்றால் மூலப்பத்திரத்தில் தேதி மற்றும் வருடம் மாறி இருந்ததால் பிழை திருத்தம் செய்யப்பட்டது. வா.சா.ஆ–5 ல் 1 ஆம் பிரதிவாதி பெயருக்கு 26.02.1974 ஆம் தேதி ஏற்பட்ட ஆத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 761/1992 ன்படி பதிவு செய்யப்பட்டுள்ள பாகப்பத்திரத்தில் கண்டுள்ள B ஷெட்யூல் சொத்து என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திற்குண்டான ரத்து பத்திரமான வா.சா.ஆ– 6 ல் தேதி 06.03.1992 என்பதற்கு பதிலாக 26.02.1974 என்று தவறுதலாக எழுதப்பட்டுள்ளது என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த 272/2011 வழக்கில் பிழை திருத்தம் பத்திரைத்தை காட்டாமல் தவறான ஆவணங்களை வைத்து தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கை நான் வாபஸ் பெறும்போது இந்த வழக்கு நிலுவையில் இருந்தது. மேற்படி 272/2011 ல் உள்ள தீர்ப்பு என்னை கட்டுப்படுத்த வேண்டும் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் நான் பிழை திருத்தம் செய்ததால் மேற்படி ஆவணங்கள் செல்லாது என்று சொன்னால்

சரியல்ல. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் நான் ஆவணங்களை திருத்தம் செய்தது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை எனக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கும்போது என்னுடன் தான் இருந்தார் என்றால் அவர் ஊரில் உள்ள வீட்டில் இருந்தார். நான் தோட்டத்தில் உள்ள வீட்டில் இருந்தேன். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்போது எனது அம்மா உயிருடன் இல்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதும்போது எனது தந்தை என்னுடைய பராமரிப்பில்தான் இருந்தார் என்றால் சரிதான். எனது சகோதரர் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் எனத தந்தைக்காக நான் வழக்கை நடத்தினேன் என்ற சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் எனது தந்தை வேறு வக்கீல் வைத்தார். மேற்படி என் தந்தை என்னுடைய கட்டுப்பாட்டில் இருந்ததால்தான் அவரை விட்டுவிட்டு நான் அசல் வழக்கு எண் 272/2011 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அவர் எனக்கு தொந்தரவு தரவில்லை அதனால் அவரை அந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time : 12.26P.M.

**ஒப்பம்/– அ.நர்மதாராணி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**